[31st August 1970

திரு. டி. கே. சுப்பையா : நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, இந்த முந்திரிச் சாகுபடியில் விவசாயிகள் அரசாங்கத்திடமிருந்து முந்திரி விதை பெற்றுப் பயிரிடுகிறார்கள். பயிரிட்டதைத் தான் அரசாங்கத் திற்குத் தருகிறார்கள். இதைத்தான் 'குமரி கல்டிவேஷன்' என்கிறார்கள். இதனால் அரசாங்கத்திற்கு எந்தவிதமான செலவும் கிடையாது. மத்தி யில் வேறு பொருள்களை அந்த நிலங்களில் பயிரிட்டு அவர்களே அதை ஆண்டு அனுபவித்துக் கொள்வார்கள். எனவே அந்த மாதிரிச் சாகுபடி செய்யப்பட்ட நிலத்தின் பரப்பு எவ்வளவு ? அதற்கான செலவு எவ் வளவு ? அரசாங்கத்தின் சொந்தப் பணத்திலிருந்து, விதை விதைப்ப திலிருந்து பயிர் பாதுகாப்பதிலிருந்து செலவு செய்யப்பட்டது எவ்வளவு? அதன் நிலப்பரப்பு என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தற்போது தனித்தனியான விவரம் இல்லை. வேண்டுமானால் பிறகு சேகரித்துக் கொடுக்கலாம்.

Selection Committee for Agricultural Colleges

*57. *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

(*a*) the names of those who have been appointed in the Committee to select students for Agricultural Colleges for the current academic year (1970-71) ;

(*b*) whether the Government have received complaints stating that questions were asked, about the students' political leanings and their favourite stars in the cine field and the like by the non-official members of the Committee ?

விவசாயக் கல்லூரிகளுக்கு மாணவர்களைத் தேர்நதெடுக்கும் குழு

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) நடப்பு கல்வி ஆண்டில் (1970-71) விவசாயக் கல்லூரி களுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவிற்கு நியமிக்கப்பட்டவர் களின் பெயர் யாவை ?

(இ) மாணவர்களிடம் கேள்விகள் கேட்ட உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினர்கள் மாணவர்களின் அரசியல் சார்பு, எந்த சினிமா நடிகர் களை மாணவர்கள் விரும்புகிறார்கள் என்பன போன்ற கேள்விகள் கேட்டதாக அரசுக்குப் புகார்கள் வந்தனவா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) (1) திரு. இளம் வழுதி, எம்.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ., கடலூர், குழுத்தலைவர்.

(2) திரு. எம். பி. வடிவேலு, முன்னாள் எம்.எல்.ஏ., முடலைக் குண்மாய், வாணியம்பாடி, குழு அங்கத்தினர்.

(3) டாக்டர் ஸி. வி. கோவிந்தசாமி, மதுரை, விவசாயக் கல் லூரி முதல்வர், அங்கத்தினர்—செயலாளர்.

(இ) இல்லை.

31st August 1970]

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : கோவைக்குத் தேர்வுக்காகச் சென்ற மாணவர்களில் ஒரிருவரை நான் விசாரித்தபோது, இப்படிப் பட்ட கேள்விகள் கேட்கப்பட்டதாக என்னிடமே அவர்கள் கூறினார்கள். அரசாங்கத்திற்கு அதுபற்றிய புகார் ஏதேனும் வந்ததுண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அப்படிக் கேள்வி கேட்ட தாக நான் கூட பத்திரிகையில் செய்தி பார்த்தேன். எனவே அந்தக் குழுவின் தலைவரிடம் நான் கேட்டேன். ஆனால் அப்படிப்பட்ட கேள்வி எதுவும் கேட்கப்படவில்லை என்றும், குழுவில் ஒரு தனி உறுப்பினராக வந்தவர் மாத்திரம் ஒரே ஒரு மாணவரைப் பார்த்து, "நீ சினிமாவுக்குப் போவது உண்டா?" என்றுதான் கேட்டார் என்று குறிப்பிட்டார். வேறு எந்தத் தவறான முறையிலும் அரசியல் தொடர்புடைய கேள் வியோ, தனிப்பட்ட நபர்களைப் பற்றியோ, சினிமா நடிகர்களைப் பற்றியோ கேள்வி எதுவும் கேட்கப்படவில்லை. இந்தக் கேள்வி கேட்ட தற்குக் காரணம் மாணவருடைய மனப்பான்மை எப்படி இருக்கிறது என்பதை அறிவதற்காகத் தான். இந்த மாணவர் படிக்கக்கூடியவர் தானா அல்லது சினிமாவுக்குப் போகிறவரா என்று தெரிந்துகொள்ள 'நீ சினிமாவுக்குப் போவதுண்டா', அந்தப் பழக்கம் உண்டா என்று தான் கேட்டார் என்று அவர் குறிப்பிட்டார்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : கோவையில் உள்ள விவசாயக் கல்லூரியை அவசரச் சட்டம் கொண்டு வந்து பல்கலைக் கழகமாக மாற்றுவதாகச் சொன்னார்கள். சட்ட மன்றத்திலும் ஒரு மசோதா கொண்டு வந்து பல்கலைக் கழகமாகச் சட்டப்படி மாற்றுவதாகச் சொன்னார்கள். ஆனால் இப்படியே அது காலதாமதமாகிறது. இந்த ஆண்டே ஏற்படுத்தப் போவதாகச் சொன்னது இன்னும் ஏற்படவில்லை. எனவே இதில் ஏதாவது தவிர்க்க முடியாத சிக்கல் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தவிர்க்க முடியாத சிக்கல் எதுவும் இல்லை. கோவையில்தான் பல்கலைக் கழகம் ஏற்படப் போகிறது. இந்த ஆண்டே அது ஏற்பட இருந்தது. ஆனால் இப்போது இலாக்காவின் கீழ் இருக்கும் இன்னும் சில ஆராய்ச்சி நிலையங்களை மீண்டும் இலாக்கா வின் கீழேயே வைத்துக் கொள்வதா அல்லது பல்கலைக் கழகத்திடம் ஒப்படைத்துவிடுவதா என்று ஒரு சிறிய சிக்கல் எழுந்தது. எனவே மற்ற பல்கலைக் கழகங்களைச் சென்று பார்வையிட்டு இது சம்பந்தமாகத் தெரிந்துகொண்ட பிறகு, இதில் ஒரு முடிவெடுக்கலாம் என்று தற்போது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு இல்லையென்றாலும், அடுத்த ஆண்டு கண்டிப்பாக வரும்.

Transport of paddy

*58. *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state :

(*a*) whether there is any proposal before the Government to remove the 50% levy for transport of paddy from Thanjavur district in view of surplus paddy position with the Government ; and

(*b*) if so, the stage at which the matter now stands ?